# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2017 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2017.05.29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# விசேட வைப்புக் கணக்கு

**இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியை அனுப்புவதற்கென வெளிநாட்டவர்களுக்கான விசேட வைப்புக் கணக்கொன்றிற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

ச.வ.ஓ. 54/2016

**இலங்கையினுள் வெளிநாட்டுச் செலாவணியை அனுப்புவதற்கென வெளிநாட்டவர்களுக்கான விசேட வைப்புக் கணக்கொன்றிற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விசேட வைப்புக் கணக்குச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

விசேட வைப்புக் கணக்கு.

**2.** (1) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, வெளிநாட்டவர் ஒருவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கையிலுள்ள வர்த்தக வங்கி ஒன்றில் (இதனகத்துப் பின்னர் "கணக்கு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "விசேட வைப்புக் கணக்கு" என அழைக்கப்பட வேண்டிய கணக்கொன்றை திறக்கலாம் மற்றும் பராமரிக்கலாம்.

(2) கணக்கானது (இதனகத்துப்பின்னர் "ஆகக் குறைந்த பணத்தொகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்நூறு ஆயிரம் ஐக்கிய அமெரிக்க டொலருக்குக் குறையாத ஆகக் குறைந்த பணத்தொகையுடன் அல்லது அத்தகைய மாற்றத்தகு வெளிநாட்டுச் செலாவணியில் அதற்குச் சமமான தொகையுடன் திறக்கப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர், எந்த மாற்றத்தகு வெளிநாட்டுச் செலாவணியினால் இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்படாத கணக்கை வெளிநாட்டவர் ஒருவர் தொழிற்படுத்தலாமோ அந்த வேறு ஏதேனும் மாற்றத்தகு வெளிநாட்டுச் செலாவணியை ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கலாம்.

2-PL 005198 - 475 (2017/05)

கணக்கு வைத்திருப் போர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள்.

**3.** (1) நான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய,-

(அ) கணக்கு வைத்திருப்பவர் -

(i) ஆகக்குறைந்த பணத்தொகை ஒன்றை வைப்புச் செய்கின்றவரும் மற்றும் பேணுகின்றவருமான; அல்லது

(ii) ஆகக்குறைந்த பணத்தொகைக்கு சமமான இலங்கையிலுள்ள கணக்கின் மூலம் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட முதலீட்டின் போதுமான எண்பிப்பைக் காட்டுகின்றவருமான

கணக்கை திறக்கின்ற தேதியிலிருந்து ஆகக்கூடியது பத்து வருட காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் வதிவிட விசா ஒன்றுக்கு தகவுடையவராதல் வேண்டும்.

(ஆ) (i) கணக்கு வைத்திருப்பவரின் வாழ்க்கைத்துணை, ஆகக் குறைந்த பணத்தொகைக்கு மேலதிகமாக, முந்நூறு ஆயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு குறையாத மேலதிக பணத்தொகையினை அல்லது அதற்குச் சமமான தொகையினை அத்தகைய கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருப்பின் இலங்கையில் வதிவிட விசா ஒன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(ii) கணக்கு வைத்திருப்பவரின் வாழ்க்கைத்துணை இச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட கணக்கு வைத்திருப்பவரது வதிவிட விசாவின் செல்லுபடியாகும் காலத்தின்போது மட்டும் வதிவிட விசாவிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(இ) அத்தகைய கணக்கு வைத்திருப்பவரின் பராயமடையாத சிறுவர், இச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட கணக்கு வைத்திருப்பவரினது வதிவிட விசாவின் செல்லு

படியாகும் காலத்தின்போது அல்லது பதினெட்டு வயதை எய்தும்வரை, இவற்றில் எது முன்னர் நிகழ்கின்றதோ அதன் போது அல்லது அதன்வரை இலங்கையில் வதிவிட விசா ஒன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) கணக்கை வைத்திருப்பவர் வதிவிட விசா காலப்பகுதிக்கான அத்தகைய கணக்கைப் பேணுதல் வேண்டும்.

(3) அமைச்சர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கணக்கு வைத்திருப்பவர், கணக்கின்மூலம் முதலீடு செய்யக்கூடிய முதலீடுகளின் வகுதிகளை ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கலாம்.

(4) கணக்கு வைத்திருப்பவர், எழுத்திலான சட்டத்திற்கிணங்க அத்தகைய நோக்கத்திற்காக வழங்கப்பட்ட தொழில் விசா இன்றி ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படும் தொழிலில் ஈடுபடுவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(5) கணக்கு வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் -

(அ) இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்படும் வருமானத்தின் மீது அல்லது இலாபத்தின் மீது; அத்துடன்

(ஆ) கணக்கில் திரட்டப்பட்ட வட்டியின் மீது அல்லது வருமானத்தின் மீது அல்லது மூலதனத்தின் மீது

மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிருவாக அலலது தொழிற்பாட்டு விதிப்பனவிற்கு அமைய, 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் வரியிலிருந்து அல்லது வேறு ஏதேனும் விதிப்பனவுகளிலிருந்து விடுபட்டவராதல் வேண்டும்.

(6) இலங்கையினுள் அனுப்புதொகைகள் மீதான வரையறை கள் பற்றி 1973 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் எவரே னும் கணக்கு வைத்திருப்போர் தொடர்பில் ஏற்புடையதாதல் ஆகாது.

(7) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால், நீதிமன்றம் ஒன்றினால் அல்லது மத்திய வங்கியினால் தேவைப்படுத்தும் போது தவிர எல்லா நேரங்களிலும் கடும் இரகசியத்தன்மை பேணப்படுதல் வேண்டும்.

விசா முதலியவற்றை வழங்குதலும் இல்லா தாக்குதலும்.

**4.** (1) ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏதேனும் விசாவை வழங்குவது, இல்லாதாக்குவது அல்லது திருத்துவது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்கு மேலதிகமாக விசாவொன்று -

(அ) கணக்கு வைத்திருப்பவரின் இறப்பின் மேல்;

(ஆ) கணக்கு வைத்திருப்பவர் தேசத்துரோகி என சந்தேகப் படுவதன் மேல்;

(இ) (3) ஆம் உட்பிரிவிற்கமைய இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த பணத்தொகையைப் பேணுவதற்கு கணக்கு வைத்திருப்பவர் தவறுவதன் மேல்;

(ஈ) வங்கி முறிந்தவர் என தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்;

(உ) கணக்கு வைத்திருப்பவர் முதலீட்டு நோக்கங்களுக் காகப் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டு செலா வணியை கணக்கின் மூலம் அனுப்புவதற்கு தவறுவதன் மேல் ;

*(ஊ)* கணக்கை மூடிவிடுவதன்மேல்.

இல்லாதாக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(3)* கணக்கு வைத்திருப்பவர் 3(1)(அ) என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆகக்குறைந்த பணத்தொகையினைப் பேணுவதற்குத் தவறியுள்ளவிடத்து வர்த்தக வங்கியானது ஒரு பஞ்சாங்க மாதத்தினை விஞ்சாத அருட்காலப்பகுதி ஒன்றை கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கிய பின்னர் ஏழு நாட்களினுள் குடிவரவு, குடியகல்வின் கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

*(4)* விசாவானது (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நிகழ்வு ஏற்படுவதன் மேல் இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து, 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, குடிவரவு, குடியகல்வு சட்டத்தின்கீழ் வழங்கப்படக்கூடியவாறான ஏதேனும் பணிப்பு, கட்டளை அல்லது அறிவுறுத்தல் அல்லது வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஏதேனும் பணிப்பு என்பவற்றுக்கு இணங்க அவசியமாக வரக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கை எல்லாவற்றையும் எடுத்தல் கணக்கு வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

**5.** *(1)* இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்டவையும், அவற்றுக்காக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றவையுமான எல்லாக் கருமங்களுக்காகவும் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

*(2)* அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதோடு அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*(3)* அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர், இயன்றவரை விரைவாக அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத

ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஒழுங்குவிதிகள் அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**6**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய - பொருள் கோடல்.

"கணக்கு வைத்திருப்பவர்" என்பது, இச்சட்டத்தின் நியதிகளின்படி கணக்கொன்றைத் திறந்துள்ளவரும் அதனைப் பேணுகின்றவருமான வெளிநாட்டவர் ஒருவர் எனப்பொருள்படும்;

"மத்திய வங்கி" என்பது, 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"வர்த்தக வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஒரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கி எனப் பொருள்படும்;

"வெளிநாட்டவர்" என்பது, இலங்கைப்பிரசை ஒருவர் அல்லாத இயற்கை ஆள் ஒருவர் எனப்பொருள்படும் என்பதுடன் இது இலங்கையின் இரட்டைப் பிரசாவுரிமை கொண்டவரையும் உள்ளடக்குதல் வேண்டும்;

"அமைச்சர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**அட்டவணை**

[*பிரிவு 2(2)*]

1. பிரித்தானிய பவுண்
2. யூரோ.
3. அவுஸ்திரேலியா டொலர்
4. ஜப்பான் யென்
5. சிங்கப்பூர் டொலர்
6. கனேடிய டொலர்
7. சுவிஸ் பிராங்க்

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*